

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை, இந்திய அணி சார்பில், குழு போட்டியில் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற ஆர். ஆதவன் அவர்கள், நேரில் சந்தித்து, வெண்கலம் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை இன்று (03.01.2017) காண்பித்து, வாழ்த்து பெற்றார்.

செ.வெ.எண்: 05/2017 நாள்: 03.01.2017

**இந்திய அணி சார்பில் குழு போட்டியில் கலந்து கொண்டு,
வெண்கலப் பதக்கம் பெற்ற ஆர். ஆதவன் அவர்கள்
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை
இன்று (03.01.2017) நேரில் சந்தித்து, வாழ்த்து பெற்றார்.**

ஆசிய அளவிலான இளைஞர் இறகுப்பந்துப் போட்டி (Shuttlecock) சைனாவிலுள்ள, குவான்ஜு நகரில் டிசம்பர் 23 முதல் 27 வரை நடைபெற்றது.

இதில், இந்திய அணி சார்பில் குழு போட்டியில், நாகர்கோவில் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவன் ஆர்.ஆதவன் அவர்கள் போட்டியில் கலந்து கொண்டு, வெண்கலப்பதக்கம் பெற்றார். இப்போட்டிகளில் 11 நாடுகள் கலந்து கொண்டன. இவருக்கு நாகர்கோவில் அண்ணா ஸ்டேடியத்தில் வைத்து 6 மாதங்களாக திரு. அருள்பிரகாஷ் (சர்வதேச நடுவர்) மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர் மார்ச் 2017-ல், பாரிசில் நடக்கவுள்ள பிரெஞ்ச் ஓப்பன் சாம்பியன்ஷிப் போட்டியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை, திரு. ஆர்.ஆதவன் அவர்கள், இன்று (03.01.2017) நேரில் சந்தித்து, பாராட்டு சான்றிதழ் மற்றும் வெண்கலம் பதக்கத்தை காண்பித்து, வாழ்த்து பெற்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் திரு. ம. கில்பட் பென்சமின், திரு. அருள்பிரகாஷ் ஆகியோர் உடனுள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.